செய்தி வெளியீடு எண் 837/2009 நாள் 2.11.2009

# சேலம் மாவட்டத்தில் 33 பேரூராட்சிகளுக்கும் 385 கிராம ஊராட்சிகளுக்கும் அனைத்து கிராம மற்றும் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் வளர்ச்சி திட்டப்பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது – மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.வீரபாண்டி எஸ்.ஆறுமுகம் அவர்கள் தகவல்!

சேலம் மாவட்டம் கன்னங்குறிச்சி பேரூராட்சியில் அண்ணா நூற்றாண்டு நினைவு மன்ற கூட்டரங்கு, தரைமட்ட நீர்தேக்க தொட்டி, அங்கன்வாடி மையம், ஆரம்ப சுகாதார நிலைய கூடுதல் கட்டிடம் மற்றும் கொண்டப்பநாயக்கன்பட்டி மற்றும் செட்டிச்சாவடி ஊராட்சி நடுநிலைப்பள்ளிகளில் கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் திறப்புவிழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.சந்திரகுமார்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.வீரபாண்டி எஸ்.ஆறுமுகம் அவர்கள் பங்கேற்று ரூ.86.30 லட்சம் செலவில் முடிக்கப்பட்ட திட்டப்பணிகளை திறந்து வைத்தும் மொத்தம் 119 நபர்களுக்கு ரூ.1,55,000 மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். விழாவில் அவர் பேசியதாவது:-

மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு பணிகளை சிறப்பாக செய்து வருகிறார். தமிழ்நாட்டில் உள்ள 12,620 கிராம ஊராட்சிகள், 561 பேரூராட்சிகள் உள்ளன. இவ்வற்றில் வரக்கூடிய நிதியை வைத்துக் கொண்டு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க வாய்ப்பில்லை. எனவே அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.2,524 கோடி செலவில் தார்சாலை, சிமெண்ட்சாலை, நூலகம், வடிகால் கட்டமைப்பு, சுகாதார பணிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. பேரூராட்சிகளில் ஒவ்வொரு பேரூராட்சிக்கும் ரூ.50 லட்சம் வீதம் செலவு செய்யப்பட்டு பல்வேறு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் தான் கன்னங்குறிச்சி பேரூராட்சியில் பல்வேறு திட்டப்பணிகள் செய்து முடிக்கப்பட்டு இன்று திறப்புவிழா கண்டுள்ளது.





சேலம் மாவட்டம் கன்னங்குறிச்சி பேரூராட்சியில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.வீரபாண்டி எஸ்.ஆறுமுகம் அவர்கள் பல்வேறு திட்டப்பணிகளை திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.சந்திரகுமார்,இ.ஆ.ப.,மாநகராட்சிமேயர் திருமதி.ஜெ.ரேகாபிரியதர்ஷினி,மாநகராட்சி துணை மேயர் திரு.சி.பன்னீர்செல்வம்,உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திரு.இரா.ஞானசேகரன், ஊராட்சி துணைத்தலைவர் திரு.க.சுரேஷ்குமார், பேரூராட்சி மன்ற தலைவர் திரு.அ.பூபதிஆகியோர் உள்ளனர்.

கடந்த மூன்று ஆண்டுகளில் கன்னங்குறிச்சியில் ரூ.2.40 கோடியில் 104 திட்டப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. தற்போது ரூ.31 லட்சத்தில் 15 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 25 லட்சம் செலவில் பல்வேறு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. குடிசை மாற்று வாரியத்தின் மூலம் 34.50 லட்சம் செலவில் வார்டுகளுக்கு கான்கீரிட் சாலை, தார்சாலை மற்றும் வடிகால் பணிகள் செய்யப்பட்டுள்ளது. கன்னங்குறிச்சி மூக்கநேரி சாலை அகலபடுத்தும் பணிக்கு ரூ.84 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கலெக்டர் பங்களா முதல் கன்னங்குறிச்சி வரை தார்சாலையை அகலப்படுத்தும் பணிக்கு ரூ.31 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. கரும்பு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மன்னார் பாளையம்

முதல் கன்னங்குறிச்சி வரை ரூ.25 லட்சம் வரை தார் சாலை, மனக்காடு முதல் கன்னங்குறிச்சி வரை ரூ.10 லட்சத்தில் தார்சாலை, கோரிமேட்டிலிருந்து கன்னங்குறிச்சி வரை ரூ.30 லட்சத்தில் தார்சாலை அமைக்கப்பட்டுள்ளது. நான் அமைச்சராக இருந்த போது தாமரை நகரில் 159 வீடுகளுக்கு பட்டா வழங்கப்பட்டது. தற்போது இன்னும் 122 வீடுகளுக்கு பட்டா கேட்டு கோரிக்கை வைத்துள்ளீர்கள். இதையும் நான் நிறைவேற்றுவேன்.

கன்னங்குறிச்சி பேரூராட்சி அலுவலகம் முன்பாக உள்ள சாலையை பேரூராட்சி நிதியிலிருந்து செப்பனிட்டு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். பல்வேறு வளர்ச்சிதிட்ட பணிகளையும், பல்வேறு நலத்திட்ட உதவிகளையும், உங்களுக்கு செய்வதற்காக முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றுள்ளார். உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் இதுவரை 642 நபர்களுக்கு ரூ.2.96 கோடி மதிப்பில் சிகிச்சை பெற்றுள்ளனர். தேர்தலின் போது சொல்லிய திட்டங்கள் மற்றும் சொல்லாத திட்டங்களையும் நிறைவேற்றிக் கொண்டுள்ளார் நம் முதல்வர் கலைஞர். என்று பேசினார்.



சேலம் மாவட்டம் செட்டிச்சாவடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடத்தை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.வீரபாண்டி எஸ்.ஆறுமுகம் அவர்கள் திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.சந்திரகுமார்,இ.ஆ.ப., ஊராட்சி துணைத்தலைவர் திரு.க.சுரேஷ்குமார் ஆகியோர் உள்ளனர்.

இவ்விழாவில் உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) துறை திரு.இரா.ஞானசேகரன் வரவேற்புரையாற்றினார். செயற்பொறியாளர்(க&ப) திரு.கே.மோகன்ராஜ் திட்ட விளக்க உரையாற்றினார். சேலம் மாநகராட்சி மேயர் திருமதி.ஜெ.ரேகாபிரியதர்ஷினி, துணை மேயர் திரு.சி.பன்னீர்செல்வம், கன்னங்குறிச்சி பேரூராட்சி மன்ற தலைவர் திரு.அ.பூபதி, துணைத்தலைவர் திரு.த.தம்பித்துரை, ஒருங்கிணைந்த ஊட்ட சத்து திட்டஅலுவலர் திருமதி.சி.இளவரசி, சூரமங்கலம் மண்டலக்குழுத்தலைவர் திரு.அ.சரவணன், ஊராட்சி மன்ற தலைவர்கள் திரு.எம்.இராமசந்திரன், திரு.கே.எம்.ராஜா, துணைத்தலைவர் திரு.கேசவன் மற்றும் கன்னங்குறிச்சி அனைத்து வார்டு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். துணை இயக்குநர்(சுகாதார பணிகள்) ஜெ.நிர்மல்சன் நன்றியுரையாற்றினார்.

வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சேலம்.